செய்திப் பணிப்பாளர் / செய்தி ஆசிரியர் 2013.11.23

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடி 2013=100) ஒக்டோபர் 2015

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது 2011 யூன் மாதம் தொடக்கம் கொழும்பு மாவட்ட நகரப் பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் 2006/07 இனை அடியாண்டாகக் கொண்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்னை வெளியீடு செய்து வருகின்றது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அண்மையில் வெளியீடு செய்யப்பட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பதுடன் அது 2015 நவம்பர் மாதம் தொடக்கம் உரிய கலண்டர் மாதம் நிறைவடைந்து 21 நாட்களின் பின்னர் வெளியீடு செய்யப்படும். புதிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2012/13 ஆண்டின் நுகர்வோர் செலவுப் போக்கின் அடிப்படையில் நிறையிடப்பட்டு சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலம் கிடைக்கும் பயன்கள் எண்ணற்றவையாகும். அது நுகரப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பொது விலைமட்டங்களில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்குரிய ஒரு குறிகாட்டியாகவும் பண வீக்கத்தினை அளவிடும் முக்கிய காட்டிகளில் ஒன்றாகவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் நுகர்வோர் விலைச்சுட்டெண் பிரதானமாக நிதி மற்றும் வருமானக் கொள்கைகளை தீர்மானிப்பதற்கும் சமூக பொருளாதாரத் தரவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் கொள்கை வகுப்பாக்கத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது. அது சம்பளங்கள் மற்றும் நிதி வருமானப் பகுப்பாய்வுகளின் மூலம் சம்பளங்களைத் சீராக்கங்களைத் தீர்மானிப்பதற்கும் பயன்படுத்தப்டுகின்றது. தேசிய வருமானத்தைக் கணிக்கும் போது விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு அமைவாக நடைமுறைப் பெறுமதியினைச் சீராக்கம் செய்யும் சுருக்கியாகவும் நுகர்வோர் விலைச் சுட்டெண் பயன்படுத்தப்படுவதுடன் நாட்டின் மொத்தப் பணவீக்கத்தை அளவிடும் குறிகாட்டியாவும் பயன்படுத்தப்படும்.

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளுக்கு அமைவாக புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அதாவது, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைக் கணிக்கும் போது இலங்கையின் ஒன்பது மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் விலைகள் சேகரிக்கப்படும். கொழும்பு பெரும்பாக நகரப் பிரதேசங்களுக்கான விலைச் சுட்டெண் ஒன்று 1953ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆண்டு ஏப்ரல் மாதம் வரை திணைக்களத்தினால் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வந்தது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் கொழும்பு மாவட்டத்தின் நகரப் பிரதேசங்களுக்காக மட்டும் எல்லைப்படுத்தப்பட்ட விலைச்சுட்டெண் ஒன்றை 2008 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் கணித்து வெளியிட்டு வந்தது. எவ்வாறாயினும் முழு நாடும் உள்ளடங்கும் வகையிலான விலைமாற்றங்களைக் கணிப்பதற்கு விலைச் சுட்டெண் ஒன்று தேவை என்பது தற்போது உணரப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டவாறு நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கை தீர்மானங்களின் செயற்றிறனை அதிகரிப்பதற்காகத் தேசிய சுட்டெண் ஒன்று அவசியமாகவுள்ளது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்னைக் கணிப்பதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரத் தகவல்களும் பரந்துபட்ட வகையில் வளர்ச்சியடைந்துள்ளன.

புதிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கான நிறையிடல் நுட்பமானது 2012/13 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குடித்தனத்தின் வருமானம் மற்றும் செலவு பற்றிய அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும். குடித்தனத்தின் வருமானம் மற்றும் செலவு

பற்றிய அளவீட்டிற்காக (2012/13) குடித்தனங்கள் மேற்கொண்ட சகல விதமான செலவுகளும் உள்ளடக்கப்படுவதுடன் அந்தத் தகவல்கள் மூலம் நாட்டின் சகல குடித்தனங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படும். தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடியாண்டாக 2013 ஆம் ஆண்டு கருத்தில் கொள்ளப்படுகின்றது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைக் கணிப்பதற்காக கொழும்பு நகரப் பிரதேச எல்லைக்குள் 14 மத்திய நிலையங்களில் பண்டக் கூடைக்கான விலை சேகரிக்கப்படுகின்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்காக சகல மாவட்டங்களினதும் பிரதான நகரங்களில் விலை சேகரிக்கும் மத்திய நிலையங்கள் 3 இல் பண்டக் கூடைக்கான விலை சேகரிக்கப்படும்.

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தல்களுக்கமைய பண்டக் கூடை 12 பிரதான தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இதில் மதுபானம், புகையிலை, போதைப் பொருட்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலை மற்றும் ஹோட்டல் ஆகிய 2 தொகுதிகளும் உள்ளடங்கும். ஆனால் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைக் கணிக்கும் போது மதுபானம், புகையிலை மற்றும் போதைப் பொருட்களை உள்ளடக்கிய தொகுதி உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் சிற்றுண்டிச்சாலை மற்றம் ஹோட்டல் தொகுதி உணவுத் தொகுதியின் கீழ் உள்ளடக்கப்பட்டு 10 பிரதான தொகுதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 12 பிரதான தொகுதிகளின் கீழ் சுட்டெண்கள் வெவ்வேறாகக் கணிக்கப்பட்டு அந்தப் பெறுமதிகளின் நிறையிடப்பட்ட சராசரிப் பெறுமதியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் கணிக்கப்படும்.

ஒப்பிடல் நோக்கங்களுக்காகத் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2014 ஜனவரி மாதம் தொடக்கம் 2015 ஒக்டோபர் மாதம் வரை கணிக்கப்பட்டுள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது 2015 ஒக்டோபர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 109.2 என 2015 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வெளியிட்டுள்ளது. 2015 ஒக்டோபர் மாதத்தின் சுட்டெண் பெறுமதியை செப்டெம்பர் மாதத்திற்கான சுட்டெண் பெறுமதியுடன் (108.4) ஒப்பீடு செய்யுமிடத்து 0.8 அளவிலான் சுட்டெண் பெறுமதி அதிகரிப்பு மற்றும் 0.74 அளவிலான வீதாசார அதிகரிப்பை வெளிக்காட்டுகின்றது. இதற்காக முறையே உணவுத் தொகுதியின் விலைகளில் 0.63% அதிகரிப்பு மற்றும் உணவல்லாத் தொகுதியில் 0.11% அதிகரிப்பு தாக்கம் செலுத்தியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அறிவிப்புச் செய்து ஒக்டோபர் மாதத்திற்கான வருடாந்த பணவீக்க வீதம் 3.0% எனவும் 2015 செப்டெம்பர் மாதத்திற்கான வருடாந்தப் பணவீக்கப் பெறுமதி 1.9% எனவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்ஹ அவர்கள் வெளியிட்டுள்ளார்.

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தொலைபேசி இலக்கம் - 011 - 2147001 / 011 – 2147020/ **071-3091482**